

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழாவில் கழகக் கொடியேற்றி, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுடன் சமத்துவ பொங்கலிட்டு தமிழர் திருநாளை கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கொண்டாடினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., திருமதி விசாலாட்சி பொன்முடி, ம ஜெயச்சந்திரன், இரா.ஜனகராஜ், செ. புஷ்பராஜ், அன்னியூர் சிவா, இரா. சக்கரை, தமிழ்ச்செல்விபிரபு, சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில் பாவேந்தர் பாரதிதாசன் இலக்கியப் பேரவை சார்பில் 50ஆம் ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மேனாள் ஒன்றிய அமைச்சரும் கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.இதில் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அட்சயகோபால், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் - சேலம் மாநில உரிமை மீட்பு மாநாட்டுக்கு

# 10,000 இளைஞர்கள் கலந்துகொள்ளும் விவரப் பட்டியல்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், ஜன.20-

சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கடலூர் கிழக்கு மாவட்டம் சார்பில் 10000 இளைஞர்கள் கலந்துகொள்ளும் விவரப் பட்டியல் குறித்து மாவட்டச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஜனவரி 21 சேலம் பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு

மாநில உரிமை மீட்பு முழக்கம் மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. - இளைஞர் அணி சார்பில், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்குட்பட்ட ஊராட்சி, வட்டம், வார்டு வாரியாக 10000 (பத்தாயிரம்) இளைஞர்கள் கலந்துகொள்ளும் பெயர் பட்டியல் மற்றும் எண்ணிக்கை, ஒன்றியம் வாரியாக

காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம் 391 நபர்கள், காட்டுமன்னார் கோவில் மேற்கு ஒன்றியம் 413, குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம் 449 நபர்கள், குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம் 851 நபர்கள், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம் 343 நபர்கள், திரு முட்டம் மேற்கு ஒன்றியம் 168 நபர்கள், திருமுட்டம் வடக்கு ஒன்றியம் 239 நபர்கள், கடலூர் கிழக்கு ஒன்றியம் 358 நபர்கள்,

கடலூர் மேற்கு ஒன்றியம் 260 நபர்கள், கடலூர் வடக்கு ஒன்றியம் 500 நபர்கள், கடலூர் தெற்கு ஒன்றியம் 250 நபர்கள், புவனகிரி கிழக்கு ஒன்றியம் 259 நபர்கள், புவனகிரி மேற்கு ஒன்றியம் 273 நபர்கள், கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம் 258 நபர்கள், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம் 206 நபர்கள், கம்மாபுரம் வடக்கு ஒன்றியம் 210 நபர்கள், கம்மாபுரம் தெற்கு ஒன்றியம் 180 நபர்கள், கம்மாபுரம் மத்திய ஒன்றியம் 150 நபர்கள், பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம் 253 நபர்கள், பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம் 273 நபர்கள்,

குமராட்சி கிழக்கு ஒன்றியம் 200 நபர்கள், குமராட்சி மேற்கு ஒன்றியம் 63 நபர்கள், குமராட்சி வடக்கு ஒன்றியம் 200 நபர்கள், குமராட்சி தெற்கு ஒன்றியம் 119 நபர்கள் குமராட்சி மத்திய ஒன்றியம் 171 நபர்கள்,

கடலூர் மாநகரம் மாநகரம் பகுதி வாரியாக மஞ்சக்குப்பம பகுதி 202 நபர்கள், புதுப்பாளையம் பகுதி 165 நபர்கள், திருப்பாப்புலியூர் பகுதி 141 நபர்கள், துறைமுகம் பகுதி 238 நபர்கள், நகரம் வாரியாக சிதம்பரம் நகரம் 366 நபர்கள், வடலூர் நகரம் 360 நபர்கள், பேரூர் வாரியாக காட்டுமன்னார்கோவில் பேரூர் 233 நபர்கள், குறிஞ்சிப்பாடி பேரூர் 351 நபர்கள், திருமுட்டம் பேரூர் 119 நபர்கள்,

புவனகிரி பேரூர் 95 நபர்கள், சேத்தியாதோப்பு பேரூர் 105 நபர்கள், கெங்கைகொண்டான் பேரூர் 52 நபர்கள், பரங்கிப்பேட்டை பேரூர் 109 நபர்கள், கிள்ளை பேரூர் 248 நபர்கள், அண்ணாமலைநகர் பேரூர் 119 நபர்கள், லால்பேட்டை பேரூர் 60 நபர்கள் ஆக மொத்தம் 10000 (பத்தாயிரம்) இளைஞர்கள் மட்டும் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள், இளைஞர்கள் அனைவரும் நாளை (21.01.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 8.00 மணி சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு, மாநில உரிமை மீட்பு முழக்கம் மாநாட்டில் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சேலத்தில் நடைபெற உள்ள தி.மு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாடு :

# சென்னை மேற்கு மாவட்ட கழக இளைஞர் அணியினர் தங்குவதற்கான இடங்கள் ஏற்பாடு!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வருகிற 21.01.2024 ஞாயிறு அன்று நடைபெற உள்ள தி.மு.க. கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் பங்கேற்பதற்காக, சென்னை மேற்கு மாவட்டத்திலிருந்து வருகை தரும் கழக இளைஞர் அணியினர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட திருமண மண்டபங்களில் ஜனவரி 21 அன்று காலை குளிப்பதற்கும் - சிற்றுண்டி அருந்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் விவரப்படி கழக இளைஞர் அணியினர் தங்கிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

| வ. எண். | சட்டமன்ற தொகுதி | தங்கவேண்டிய திருமண மண்டபத்தின் இடங்கள் | தொடர்புக்கு அலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | அண்ணாநகர் | துளுவ வேளாளர், திருமண மண்டபம், ஆத்தூர் டவுண் | எஸ்.அசோக்குமார் மாவட்ட அமைப்பாளர், பொறியாளர் அணி அலைபேசி: 9500036771 |
| 2 | சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | கீதாலயா திருமண மண்டபம் ஆத்தூர் (to) வாழப்பாடி டவுண் | ஐ. கென்னடி மாநில இணை செயலாளர், வர்த்தகர் அணி அலைபேசி: 9444849474 |
| | | | யூ. பிரவீன்ராஜ் அலைபேசி: 9840124518 |
| 3 | ஆயிரம் விளக்கு | கொங்கு வேளாளர் திருமண மண்டபம், சின்னசேலம் (to) ஆத்தூர் | துபாய் வி.ஆர்.விஜய் மாவட்ட அமைப்பாளர், மாணவர் அணி அலைபேசி: 9884401112 |

எனவே, மேற்கண்ட சட்டமன்ற தொகுதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடங்களில் தங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



மாதவரம் 30 (அ) வட்டத்தில் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் டி.சுந்தரம் ஏற்பாட்டில் நல உதவிகளை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஜி.துக்காரம், திருமலை துரைசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### சேலத்தில் இளைஞர் அணி மாநாட்டிற்கு ஆவடியில் இருந்து சிறப்பு ரெயில் ஏற்பாடு!

# திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பு!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர், ஜன.20-

சேலத்தில் நாளை நடைபெறும் இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பங்கேற்றிட ஆவடியிலிருந்து சேலத்திற்கு சிறப்பு ரெயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ரெயிலை திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழக செயலாளர், ஆவடி சா.மு.நாசர் அறிக்கை வருமாறு:-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் வரும் 21.01.2024 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி 2ஆம் மாநில திருப்புமுனை மாநாட்டில் பங்கேற்கும் திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. -மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி தோழர்களுக்காக சிறப்பு ஏற்பாடாக, இன்று (20.01.2024) இரவு சிறப்பு ரயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, இளைஞர் அணி சிறப்பு இரயிலில் முன்பதிவு செய்த திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக இளைஞர் அணியினர் இன்று (20.01.2024) இரவு 09:00 மணிக்கு ரயில் நிலையத்திற்கு வந்து கிழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ரயில் பெட்டி பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறார்கள். அணி திரள்வோம் இளைஞர் அணி மாநாட்டில்.

ரயில் புறப்பாடு விவரம்

ஆவடியில் இருந்து சேலம், ரயில் புறப்படும் இன்று ( 20.01.2024) ரயில் நிலையம் ஆவடி, புறப்படும் நேரம் இரவு 9:30 மணி.

சேலத்தில் இருந்து ஆவடி, ரயில் புறப்படும் நாள் 21.01.2024. புறப்படும் நேரம் இரவு 9:30 மணி, ரயில் நிலையம் பெத்தநாயக்கன் பாளையம், சேலம்.

இரயில் பெட்டி பொறுப்பாளர்கள் மற்றும் துணை பொறுப்பாளர்கள் விவரம் வருமாறு:-

அவைத் தலைவர் ம. ராஜி- 9444050751.

சிகாமணி - 6381443878, ஹரிபாபு - 9941577999, பட்டு பாலா - 8939336071

தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ் -9677111553

பொறியாளர் அணி அமைப்பாளர் எம். மோகன் - 9566137098, 8637657951

டி.என்.பி. ஹரிபாபு - 9941577999, இயேசுபாலன் - 7812852212, நிர்மல் ராஜ் - 9787159005, மாணிக்கமுத்து - 7418237797

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் செந்தாமரை.

கருணாநிதி - 9884632315, அக்னி ராஜேஷ் - 9884541950, ஸ்ரீதர் - 9840632512

மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார் - 9176712347.

பி. நவீன்குமார் - 9884578397, ஆர். மணிவண்ணன் - 8754555021, ஆர்.பத்மநாபன் - 9789890480, அஜித்குமார் - 8682952016, எ.விக்டர் - 9840861022

மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன் - 9159136372.

கருணாகரன் -9003113248, எம்.பி.குமார் - 9840165305, இ.குமார் - 7373432085, நாகப்பன் -9786734941, இருசப்பன் - 9941250341.

பொதுக்குழு உறுப்பினர் கு.விமல் வர்ஷன் - 9444944745.

தனுஸ் -97911 37903, விஜய் -- 6374953839, அரவிந்த் -- 9176032659

பகுதி கழக வழக்கறிஞர் எம்.கார்த்திக் - 9840626533.

எ.அகஸ்டின் - 7550137434, டி.தமிழ்ச்செல்வன் - 9841479885, எஸ். சந்தோஷ்குமார் - 9962611608, ஜி.பிரசன்னா - 8838868472.

வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ.வினோத் - 9841889674.

ஜெ.ஜெயக்குமார் - 9841889674, பி.கே.இ. நாகராஜ் - 9943336109, ராஜபாண்டியன் - 9940095281, ரமேஷ் - 9150548545.

தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆர். சூரிய பிரசாஷ் -9952047884.

வி.டி.தினேஷ் - 9500139789, யுவராஜ் - 9791093162, மோதிஸ் - 8489386456, சதீஷ் - 9003143369, பாக்யராஜ் - 9940024443.

தொழிலாளர் அணி அமைப்பாளர் ஓ.ஆர். நாகூர் கனி - 9444415555.

பி.பார்த்த சாரதி - 9841125298, எஸ். முகமது யாமீன் - 9566023613, எம். யுவராஜ் - 9962008055, பி. ரங்கசாமி - 7200501679.

மாணவரணி அமைப்பாளர் தியாகராஜன் - 9003544456.

### மதுரவாயல் வடக்கு

# 92வது வட்டத்தில் புதிய கட்டிடம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, ஜன.20-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்டத்தில் நேற்று கழக தலைவர் - முதல்வர் தளபதியார் அவர்களின் திராவிட மாடலின் மாணவர்கள் நலம் காக்கும் அரசு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி நேற்று திறந்து வைத்தார்.

மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன், 7வது மண்டலகுழு தலைவரும் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் 92 வது வட்ட கழக செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் பகுதி அவைத் தலைவர் எம்.கே.பி.உதயசூரியன், 91 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆ.மாலினி, வட்ட கழக செயலாளர்கள் ப. ஆலன், எம்.கே.பி.அண்ணாதாசன்

மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ. செந்தில், சுரேஷ் மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி. எழிலரசு, ஏ.ஜி.வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.சுந்தரி, எம்.எஸ்.பிரபா, டி.கலைநேசன், எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.நவக்குமார், எம்.எஸ். தமிழ்அழகன், எம்.பி.சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ். ராகுல், டி.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சுரேஷ், எஸ். பாலாஜி, எ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், பி.நாகராஜ், கே.முருகன்,

கே.பிரகாஷ், எம்.எம். கண்ணப்பன், ஜி.நாகராஜ், எம்.சி.விமல்தாஸ், வி.ஆர். மகேந்திரன், எம்.ஜி.எம்.புகழேந்தி, சி.காமராஜ், டி. அமுல்ராஜ், எல்.கிருஷ்ணமூர்த்தி, கே.பிரகாஷ், எம். சபரிதாஸ், என்.மல்லியப்பன், எஸ்.ஆனந்தன், எம். பி.நவசுந்தர், வளர்மதி டி. நிக்சன், டி.ஆல்பர்ட், எம். எஸ்.லட்சுமணன், ஜேம்ஸ், எம்.டி.ராஜி,

இளைஞர் அணி சேர்ந்த எம்.கே.நரேஷ், எம்.எஸ். கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம்.எம். ஜெ.ரோஷன் காந்த், எம்.சக்திவேல், சாய் விரசாமி, கே.தயாநிதி, எம். பி.எழிலரசு, வி.கலைவாணன், வி.திருமுருகன், எம். இமயவர்மன், கே.மேகநாதன், எம்.வினோத், கோவிந்தசாமி, வேலாயுதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் ஜப்பார்
### சனவரி 20 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**